https://t.me/Padasalai www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in

11 ஆம் வகுப்பு

# உடனடித் தேர்வு - ஜூலை 2023

PART - III

பதிவு எண் :

கால அளவு : 3.00 மணி நேரம்] **வணிகவியல்** (விடைகளுடன்) [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு:** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு __________ என்று பெயர்.
(அ) அங்காடி (ஆ) சந்தை
(இ) நாளங்காடி (ஈ) அல்லங்காடி

2. உலக வங்கி அமைந்திருப்பது :
(அ) வாஷிங்டன் DC (ஆ) நியூயார்க்
(இ) டோக்கியோ (ஈ) ஹாங்காங்

3. நுகர்வோர் கூட்டுறவு ________ ல் முதன்முதலாக வெற்றி பெற்றது.
(அ) இங்கிலாந்து (ஆ) அமெரிக்கா
(இ) சுவிட்ஸர்லாந்து (ஈ) இந்தியா

4. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய சிறப்பு சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
(அ) பட்டய (சாசன) நிறுமம் (ஆ) அயல்நாட்டு நிறுமம்
(இ) அரசு நிறுமம் (ஈ) சட்டமுறை நிறுமம்

5. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது?
(அ) மைய வங்கி (ஆ) வணிக வங்கிகள்
(இ) கூட்டுறவு வங்கிகள் (ஈ) வெளிநாட்டு வங்கிகள்

6. RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
(அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்
(ஆ) ₹ 50,000
(இ) ₹ 2 லட்சம் (ஈ) ₹ 5 லட்சம்

7. வான் வழி அனுப்பீட்டு இரசீது ________ அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது.
(அ) ஒன்று (ஆ) இரண்டு (இ) மூன்று (ஈ) நான்கு

8. ________ ஒரு பொதுக் காப்பீட்டு வகையினைச் சார்ந்தது அல்ல.
(அ) கடல்சார் காப்பீடு (ஆ) ஆயுள் காப்பீடு
(இ) உடல்நலக் காப்பீடு (ஈ) தீக்காப்பீடு

9. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ________ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(அ) பிணையக் காப்பு (ஆ) தனியார்
(இ) குளிர்பதன (ஈ) கூட்டுறவு

10. ________ என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகைப் பத்திரமாகும்.
(அ) அரசு பத்திரங்கள்
(ஆ) அந்நிய செலாவணி மாற்று பத்திரம்
(இ) பெரு நிறுவன பத்திரங்கள்
(ஈ) உலகளாவிய வைப்பு இரசீது

11. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
(அ) 2004 (ஆ) 2007 (இ) 2006 (ஈ) 2008

12. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது ________.
(அ) வியாபாரம் (ஆ) தொழிற்சாலை
(இ) வணிகம் (ஈ) வர்த்தகம்

13. வாங்குபவரையும், விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்பவர் ________.
(அ) தரகர் (ஆ) கழிவு முகவர்
(இ) விற்பனை முகவர் (ஈ) இருப்பு வைத்திருப்பவர்

14. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருட்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் :
(அ) சந்தை வியாபாரிகள்
(ஆ) ஒரே வகை பண்டகச் சாலைகள்
(இ) பொதுப் பண்டகச் சாலைகள்
(ஈ) தெருக் கடைகள்

15. நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக் கொள்ளப்பட்டால், அது ________ எனப்படும்.
(அ) பன்னாட்டு வியாபாரம் (ஆ) பன்னாட்டு வணிகம்
(இ) மறு ஏற்றுமதி வியாபாரம் (ஈ) உள்நாட்டு வியாபாரம்

16. இறக்குமதியாளரால் தயாரிக்கப்பட்டு சரக்கை வாங்குவதற்கு ஏற்றுமதியாளருக்கு அனுப்பப்படும் ஆவணம் ________ ஆகும்.
(அ) இடாப்பு (ஆ) சரக்காணை
(இ) விசாரணை (ஈ) கப்பல் வாடகை முறி



enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com PH:9844421000 / 8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



17. வருமான வரி என்பது :
 (அ) வியாபார வரி (ஆ) நேரடி வரி
 (இ) மறைமுகவரி (ஈ) சேவை வரி

18. இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
 (அ) உடன்படிக்கையால் (ஆ) பிறப்பால்
 (இ) முதலீட்டின் அடிப்படையில்
 (ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்

19. பொதுத்துறை நிறுவனத்தின் மிகப் பழமையான அமைப்பு :
 (அ) பொதுத்துறை நிறுவனம் (ஆ) துறைவாரி நிறுவனம்
 (இ) பன்னாட்டு நிறுவனம் (ஈ) சட்டமுறை நிறுவனம்

20. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் _________.
 (அ) கடனீந்தோர் (ஆ) உரிமையாளர்கள்
 (இ) கடனாளிகள் (ஈ) ஊழியர்கள்

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**7 × 2 = 14**

21. வேலை என்றால் என்ன?
22. கர்த்தா என்பவர் யார்?
23. வணிக வங்கிகளின் பொருள் தருக.
24. தொழில் முறை நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?
25. கடனாக பெறப்பட்ட நிதியின் கீழ்வரும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.
26. வைப்பு இரசீது என்றால் என்ன?
27. சிறப்பு பண்டகசாலைகள் என்றால் என்ன?
28. சரக்காணையின் வகைகளைக் குறிப்பிடுக.
29. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) என்றால் என்ன?
30. ஒப்பந்தம் என்றால் என்ன?

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**7 × 3 = 21**

31. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கத்தின் பொருள் தருக.
32. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33. தேசிய மின்னனு நிதிப் பரிமாற்றம் (NEFT) – விளக்குக.
34. குளிர்சாதன பண்டகக்காப்பு என்றால் என்ன?
35. கூட்டுறவின் குறைபாடுகள் எவையேனும் மூன்றினை விவரிக்கவும்.
36. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளை விளக்குக.
37. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.
38. மூலதனக் கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?
39. செல்லாத ஒப்பந்தம் என்றால் என்ன?
40. மறு ஏற்றுமதியின் சிறப்புக் கூறுகளை விவரிக்கவும்.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**7 × 5 = 35**

41. (அ) வணிகத்தின் பல்வேறு தடைகள் யாவை? (ஏதேனும் 5)
 (அல்லது)
 (ஆ) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரிக்கவும்.

42. (அ) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)
 (அல்லது)
 (ஆ) இழப்பீடு என்றால் என்ன? பல்வேறு வகையான இழப்பீடுகள் யாவை?

43. (அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5)
 (அல்லது)
 (ஆ) துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளை விவரிக்கவும்.

44. (அ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)
 (அல்லது)
 (ஆ) கூட்டுறவு சங்கத்தின் வகைகள் யாவை? (ஏதேனும் 5)

45. (அ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)
 (அல்லது)
 (ஆ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

46. (அ) நிலப் போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விளக்குக. (ஏதேனும் 5)
 (அல்லது)
 (ஆ) தனியாள் வணிகத்தின் குறைபாடுகளை விவரிக்கவும்.

47. (அ) சில்லறை வியாபாரிகளின் பண்புநலன்கள் யாவை?
 (அல்லது)
 (ஆ) காப்பீட்டின் வகைகளை விவரிக்கவும். (ஏதேனும் 5)

# விடைகள்

## பகுதி - I

1. (அ) அங்காடி
2. (அ) வாஷிங்டன் DC
3. (அ) இங்கிலாந்து
4. (ஈ) சட்டமுறை நிறுமம்
5. (அ) மைய வங்கி
6. (இ) ₹ 2 லட்சம்
7. (இ) மூன்று
8. (ஆ) ஆயுள் காப்பீடு
9. (இ) குளிர்பதன
10. (ஆ) அந்நிய செலாவணி மாற்று பத்திரம்
11. (இ) 2006
12. (அ) வியாபாரம்
13. (அ) தரகர்
14. (ஆ) ஒரே வகை பண்டகச் சாலைகள்
15. (அ) பன்னாட்டு வியாபாரம்
16. (ஆ) சரக்காணை
17. (ஆ) நேரடி வரி
18. (ஆ) பிறப்பால்
19. (ஆ) துறைவாரி நிறுவனம்
20. (ஆ) உரிமையாளர்கள்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://t.me/Padasalai www.Padasalai.Net https://CBSEtips/3pspUm0 www.CBSEtips.in



## பகுதி - II

**21.** வேலை என்பது கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்குப் பணி ஆற்றுவது ஆகும். மற்றவர்களை பணியமர்த்துபவர், பணியமர்த்துநர் என்றும் அவரால் பணியமர்த்தப்பட்டவர்கள் பணியாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

**(எ.கா.)** எழுத்தர்கள், வங்கி அலுவலர்கள், மேலாளர்கள்.

**22.** இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது ஒரு நபர் மட்டுமே. அவர் "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று அழைக்கப்படுகிறார்.

**23.** வணிக வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும் விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன.

**(எ.கா.)** ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கரூர் வைஸ்யா வங்கி.

**24.** (i) இது சமுதாயத்தால் எதிர்பாக்கப்படும் ஒரு வகை பொறுப்பாகும். ஆனால் இப்படிப்பட்ட பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிடப்படாதவையாகும்.

(ii) (எ.கா.) ஒரு நிறுவனம் தனது பொருட்கள் குறித்து விளம்பரம் மேற்கொள்ளும்போது, அத்தகைய விளம்பரம் மத உணர்வுகள் மற்றும் மக்களின் கண்ணியம் மதிக்கத்தக்க வகையில் இருத்தல் வேண்டும்.

(iii) இத்தகைய பொறுப்புகளை தொழில் அமைப்புகள் தானே விருப்பப்பட்டு கடைபிடிக்க வேண்டும்.

**25.** கடனாகப் பெறப்பட்ட நிதிகள் என்பது கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது.

**(எ.கா)**

(i) கடன் பத்திரங்கள்

(ii) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்.

**26.** ஒரு வைப்புத் தொகை ரசீது என்பது, வெளிநாட்டு நிறுவனத்தின் நேர்மைப் பங்குகள் வாங்கியதற்கு சான்றாக, வங்கியால் வழங்கப்படும் ஒரு மாற்றுமுறை ஆவணமாகும்.

**27.** ஒரு வகைப் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருள்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் சிறப்புப் பண்டக சாலைகள் எனப்படும். உதாரணமாக இனிப்பு வகையில் அல்வா மட்டும் விற்போர், துணிக்கடையில் குழந்தைகள் ஆடைகளை மட்டும் விற்போர் ஆகியோர் அடங்குவர்.

**28.** சரக்காணை மூன்று வகைப்படும் அவை.

(i) வெளிப்படை சரக்காணை

(ii) வரையறுக்கப்பட்ட சரக்காணை

(iii) உறுதி செய்யும் சரக்காணை

**29.** (i) இது சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் 2017ன் கீழ் மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

(ii) இது முன்னர் இருந்த சேவை வரி, உள்நாட்டு வரி போன்றவைகளுக்கு மாற்றாக விதிக்கப்படுகிறது.

(iii) இது ஒரே மாநிலத்திற்குள் அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்படுகிறது.

**30.** இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 ஒப்பந்த பிரிவு 2(h)-ன் படி, "சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையே ஒப்பந்தமாகும்".

## பகுதி - III

**31.** **மருவூர்ப்பாக்கம் :**

பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) என அழைக்கப்பட்டன. உணவுப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.

**எ.கா. :** தொண்டி, கொற்கை, பூம்புகார், முசிறி ஆகும்.

**பட்டினப்பாக்கம் :**

(i) பட்டினப்பாக்கம் என்பது கடலோர நகரம் ஆகும்.

(ii) **எ.கா.** முத்துக்கள், பவளங்கள், மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் இடம் பெற்றுள்ளன.

**32.** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே அவரின் பொறுப்பு முதலீட்டுத் தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்த சொத்திற்கு ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம்.

**33.** (i) இது 2005 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது. இந்த மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதி பரிமாற்ற நடவடிக்கைகள் தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்ட நேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன.

(ii) NEFT செயல்படுத்தப்பட்ட கிளை வங்கிகளில் கணக்குகளைப் பராமரிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் NEFT முறையைப் பயன்படுத்தத் தகுதியுடையவையாகும்.

(iii) பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் நடைபெறுவது இல்லை.

(iv) ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும், காலை 8.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி முடிய 23 தீர்வுகள் மட்டுமே ஒரு நாளில் அனுமதிக்கப்படுகின்றன.

(v) NEFT பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை.

**34.** (i) பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டகக் காப்பகங்களில் சேமிக்கப்படுகின்றன.

(ii) பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி போன்ற விரைவில் அழுகக்கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(iii) சரியான தரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**35.** **(i) அளவான நிதி ஆதாரங்கள் :** கூட்டுறவுச் சங்கங்களின் நிதி ஆதாரம் பிற அமைப்புகளைக் காட்டிலும் குறைவு. உறுப்பினர் கட்டணம் குறைவு, மேலும் உறுப்பினர்களின் பங்கு முதல் குறைவாக இருப்பதால், கூட்டுறவுச் சங்கங்களினால் பெரும் முதல் திரட்டி பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடிவதில்லை.

**(ii) அரசின் நிதி ஆதாரங்களை பெரிதும் நம்பியிருத்தல்:** கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கி கொள்ள முடியாமல் அரசின் நிதி ஆதரவை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலையில் அவைகள் செயல்பட்டு வருகின்றன.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/Padasalai_Net www.Padasalai.Net www.CBSEtips.in https://bit.ly/3pspUm0



(iii) **அரசால் துவங்கப்பட்ட சங்கங்கள் :** மேற்கத்திய நாடுகளில் கூட்டுறவு அமைப்புகள் ஏழை எளியவர்களால் தானாக முன் வந்து துவக்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் பெரும்பாலான சங்கங்கள், அரசின் வற்புறுத்தலால் துவக்கப்பட்ட சங்கங்கள் என கூறப்படுகின்றன.

36. (i) **உள்நாட்டு வளங்களைத் தீர்த்தல் :**

1. அந்நிய நேரடி முதலீட்டாளர்கள் வரவேற்கும் நாடுகளில் உள்ள நீர், காடுகள், தாதுப்பொருட்கள் ஆகிய இயற்கை வளங்களை விரைவில் தீர்த்து விடும் அபாயம் உள்ளது.
2. இதனால் உள்நாட்டில் உள்ள சாதாரண குடிமகனுக்கு தேவைப்படும் இயற்கை வளங்கள் கிடைக்காமல் போகலாம்.

(ii) **அதிகப்படியான முதல் வெளியேறுதல் :**

1. அயல்நாட்டு நிறுமங்கள் பங்காதாயம், குத்தகைக் கட்டணம் போன்றவை மூலம் பெருமளவு உள்நாட்டு பணத்தை வெளியே கொண்டு செல்கின்றன.
2. இதனால் உள்நாட்டில் பணப்புழக்கம் குறைந்துவிடும் வாய்ப்புள்ளது.

(iii) **தொழில் நுட்பத்தை மாற்றாமை :**

1. சில அயல்நாட்டு நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்குத் தாங்கள் கண்டுபிடித்து வைத்துள்ள தொழில் நுட்பத்தை அப்படியே தருவதில்லை.
2. அவை பெரும்பாலும் இரண்டாம் தர தொழில்நுட்பத்தையே, முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகின்றன.
3. உயர் தொழில்நுட்பத்தினை தங்களின் சொந்த நாட்டிலேயே வைத்துக்கொள்கின்றன.

37. **சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகள் பின்வருமாறு:**

(i) சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின் மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும்.

(ii) பொருள்கள் யாவும் விலை, தரம் மற்றும் ரகம் வாரியாக அறைகலன்கள் மீது அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

(iii) வாடிக்கையாளர்கள் தேவையானப் பொருட்களை தாமே எடுத்து வந்து, காசாளரிடம் உரிய தொகையை செலுத்தி வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம்.

38. மூலதனக் கணக்கில் மூன்று இனங்கள் உள்ளன.

(i) தனியார் மூலதனம்

(ii) வங்கி மூலதனம்

(iii) அலுவல் சார்ந்த மூலதனம்

39. சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தம், செல்லாத ஒப்பந்தம் ஆகும். செல்லக் கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் இதில் இல்லை. **எடுத்துக்காட்டு :** கடத்தல் பொருட்கள் வாங்க அல்லது விற்க மேற்கொள்ளும் ஓர் ஒப்பந்தம் செல்லாத ஒப்பந்தம் ஆகும்.

40. **சிறப்புக் கூறுகள் பின்வருமாறு :**

(i) இறக்குமதி தீர்வை விதிக்கப்படுவதில்லை.

(ii) இவ்வகைப் பொருட்கள் மறுசீரமைக்கப்பட்டு மற்றும் மறுகட்டுமம் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

(iii) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மறு ஏற்றுமதி செய்யப்படும் வரை பிணைய மீந்த பண்டக சாலைகளில் வைக்கப்படுகிறது.

## பகுதி - IV

41. (அ) 1. ஆள்சார் தடை 2. இடத்தடை 3. காலத்தடை 4. நிதித்தடை 5. இடர்பாட்டுத் தடை

1. **ஆள்சார் தடை**
   (i) உற்பத்தியாளர் சிலர். நுகர்வோர் பலர்.
   (ii) எனவே உற்பத்தியாளர் நுகர்வோரைச் சந்திக்கவும், நுகர்வோர் உற்பத்தியாளரைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் அரிது. இது ஆள்சார் தடை ஆகும்.

2. **இடத்தடை**
   (i) பொருட்கள் உற்பத்தி செய்வது ஒரு இடம். (மல்லிகை – மதுரை)
   (ii) ஆனால் நுகரப்படுவது வேறொரு இடம் (சென்னை)
   (iii) இரு இடங்களும் நிலப்பரப்பில் (தூரத்தால்) பிரிக்கப்பட்டுள்ளது. இது இடத்தடை ஆகும்.

3. **காலத்தடை**
   (i) உற்பத்தி செய்வது ஒரு காலம், ஆனால் அது நுகரப்படுவது மற்றொரு காலம்.
   (ii) உற்பத்திக்கும், நுகர்வுக்கும் இடைப்பட்டக் காலத்தில் பொருட்கள் அழுகிப்போகும் (பழங்கள் – காய்கறிகள் – மீன்) இதுவே காலத்தடை ஆகும்.

4. **அறிவுசார் தடை :** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக் கூடும். இத்தடை அறிவுசார் தடை என்கிறோம்.

5. **நட்ட இடர்பாட்டுத் தடை :** போக்குவரத்துக் கட்டுமம் உள்ளிட்டவைகள் மூலம் சரக்குகள் கொண்டு சென்றாலும், ஆட்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்க முடிவதில்லை, இந்நட்டத்தை ஈடுகட்டக் காப்பீடு செய்யப்படுகிறது.
   1. ஆள்சார்தடை வியாபாரத்தின் (மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி) மூலம் நீக்கப்படுகிறது.
   2. இடத்தடை போக்குவரத்து மூலம் நீக்கப்படுகிறது.
   3. காலத்தடை பண்டகக்காப்பு மூலம் நீக்கப்படுகிறது.
   4. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் மூலம் நிதித்தடை நீக்கப்படுகிறது.
   5. காப்பீடு மூலம் இடர்பாட்டுத்தடை நீக்கப்படுகிறது.

**(அல்லது)**

(ஆ) (i) **கடன் ஏடுகளைப் பராமரித்தல் :** தனது வாடிக்கை யாளரான வணிகரின் ஏட்டுக்கடன்களை பராமரிக்கும் முழுப் பொறுப்பினை தனி உரிமை பேராளன் ஏற்றுக் கொள்கிறார்.

(ii) **கடன் எல்லைகளை நிர்வகித்தல் :** வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையைத் தனி உரிமைப் பேராளன் ஏற்றுக்கொள்கிறார். இதனால் வணிகத்தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார்.

(iii) **ரொக்க முன்பணம் :** ஏறத்தாழ கடன் விற்பனையில் ஏறக்குறைய 80 விழுக்காடு முன்கூட்டியே வணிகர் பெற்று வருகிறார். இதனால் தன்னுடைய வியாபார நீர்மைத் தன்மை பாதிக்கப்படுகிறது.

(iv) **வசூல் சேவை :** வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும் இந்த நிதிச் சேவையில் அடங்கும்.

www.Padasalai.Net

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



(v) **தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்:** தனி உரிமை பேராளர் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபார செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.

**42.** (அ) (i) கூட்டாண்மையின் பெயர்.
(ii) நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை.
(iii) கூட்டாண்மையின் காலவரையறை.
(iv) கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை.
(v) கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை.
(vi) இலாப நட்டம் பகிர்வு விகிதம்.
(vii) மூலதனத்தின் மீது வட்டி.
(viii) எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம்.
(ix) கூட்டாளிகள் தரும் கடன்.
(x) கணக்கு வைப்பு.
(xi) கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு.
(xii) கூட்டாளிகள் விலகல்.
(xiii) நற்பெயர் மதிப்பிடுதல்.
(xiv) பொறுப்பு பகிர்வு.
(xv) கூட்டாண்மை கலைப்பு நடைமுறைகள்
(xvi) கூட்டாளிகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கும் முறைகளையும் மற்றும் நடுவர் தீர்ப்பிற்கு விடும் நடைமுறைகளையும் குறிப்பிடல் வேண்டும்.

**(அல்லது)**

(ஆ) (i) இழப்பீடு என்பது ஒப்பந்த மீறுகையால் பாதிக்கப்பட்ட நபர் அடைந்த நட்டத்தை ஈடுகட்டும் வகையில் தவறிழைத்த நபரால் அளிக்கப்படும் பணம் சார்ந்த ஈடு ஆகும். ஆகவே பாதிக்கப்பட்ட நபர், ஒப்பந்தம் மீறுகைக்கு காரணமான நபர் மீது இழப்பீடு பெறும் வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

(ii) இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872ன் பிரிவு 73 ஒப்பந்தத்தை மீறும் நபர் அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு அளிக்கும் பொறுப்புள்ளது. அந்த இழப்பீடு நான்கு வகைகளாக உள்ளன. அவை :

1. சாதாரண இழப்பீடுகள்
2. சிறப்பு இழப்பீடுகள்
3. பழிவாங்கும் தன்மையுள்ள அல்லது முன் மாதிரி இழப்பீடுகள், மற்றும்
4. பெயரளவு இழப்பீடுகள்.

**43.**(அ) (i) **தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள் :**

1. உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி.
2. இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.
3. பணவியல் உச்சநிலை அதிகாரி.
4. பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்.
5. புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது.

(ii) **பாரம்பரிய பணிகள் :**

1. அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகராகச் செயல்படுதல்.
2. ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதில் முற்றுரிமை.
3. வங்கியர்களின் வங்கியர்
4. கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்.
5. இறுதிநிலைக் கடன் ஈவோர்.
6. தீர்வக அமைப்பு சேவைகள்.
7. அந்நியச் செலாவணி இருப்புகளின் பாதுகாப்பாளர்.
8. அந்நியச் செலாவணி விகிதத்தின் பராமரிப்பு.
9. நம்பகத்தன்மையுள்ள தகவல் சேகரிப்பு மற்றும் வெளியீடு.

(iii) **மேம்பாட்டுப் பணிகள் :**

1. பொதுமக்களிடையே வங்கி பழக்கங்களை வளர்ப்பது.
2. குறை தீர்வு நடவடிக்கைகள்.
3. வேளாண்மை வளர்ச்சி.
4. சிறு தொழில்களை ஊக்குவித்தல்.
5. வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துதல்.
6. கூட்டுறவு துறையினை ஆதரித்தல்.

**(அல்லது)**

(ஆ) துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகள் பின்வருமாறு.

(i) **பேரளவு அமைப்பு :**

1. துறைவாரிப் பண்டக சாலை ஒரு பேரளவு சில்லறை வியாபார நிறுவனம் ஆகும்.
2. இது அதிக முதலீடு செய்து உருவாக்கப்பட்டு, இயக்குநர்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுப் பங்கு நிறும முறையில் அமைக்கப்படுகிறது.

(ii) **பல்பொருள் விற்பனை :**

1. மனிதனுக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும் ஒரே கூரையின் வாங்க முடியும்.
2. மிகக் குறைந்த விலை கொண்ட "குண்டூசி" முதல் அதிக விலை கொண்ட "வாகனம்" வரை அனைத்துப் பொருட்களையும் வாங்க முடியும்.
3. மேலும் ஒரே பொருளின் பல வகைகளும் இங்கே கிடைக்கும்.

(iii) **வாங்கும் வசதிகள்:**

1. இது வாடிக்கையாளர்களுக்கு தேவையான அனைத்து வாங்கும் வசதிகளையும் மற்றும் சேவைகளையும் அளிக்கிறது.
2. உதாரணம் ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலைகள், வாகனம் நிறுத்தும் இடம், பொழுதுபோக்கு வசதிகள் போன்றவையாகும்.

(iv) **துறைகளின் ஒருங்கிணைப்பு :** துறைவாரிப் பண்டக சாலைகள் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகையானப் பொருட்களையும் தனித்தனியே விற்பனை செய்கின்றன.

(v) **மையக் கொள்முதல் :**

1. துறைவாரிப் பண்டக சாலைகளுக்கு தேவைப்படும் அனைத்துப் பொருட்களும் தயாரிப்பாளர்களிடமிருந்து நேரடியாக மையக் கொள்முதல் செய்யப்படுகிறது.
2. ஆனால், விற்பனை பரவலாக்கப்படுவதால் ஒவ்வொரு துறையும் தனித்தனியாக பண்டகக் காப்பகங்களை இயக்குகிறது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000 Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://t.me/Padasalai.Net https://www.CBSEtips.in https://bit.ly/3pspUm0



**44.** (அ)

| எண் | அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|---|
| 1. | பொருள் | உள்நாட்டு வணிகம் ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | பன்னாட்டு வணிகம் நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கை ஆகும். |
| 2. | உற்பத்திக்காரணிகள் இடம் பெயர்தல் | உற்பத்திக் காரணிகள் உழைப்பு, முதல், தொழில் நுட்பம் ஆகியவை நாட்டின் எல்லைக்கு அப்பால் இடம்பெயர முடியாது. | இவைகள் தடையில்லாமல் ஒரு நாட்டின் எல்லைக்கு அப்பால் இடம்பெயர முடியும். |
| 3. | கலாச்சார பழக்க வழக்கங்கள் | உள்நாட்டு வணிகத்தில் நுகர்வோர் ஒரு நாட்டின் கலாச்சாரம், விருப்பம், பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். | இதில் நுகர்வோர் பல நாடுகளின் கலாச்சாரம், விருப்பம், பழக்க வழக்கங்களை பின்பற்றுகின்றனர். |
| 4. | சட்டம் | ஒரு நாட்டின் சட்டம், விதிகள் கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. | பல்வேறு நாடுகளின் சட்டங்கள், விதிகள் கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. |
| 5. | பயன்படுத்தும் நாணயம் | இங்கு ஒரே நாட்டின் நாணய மதிப்பில் (இந்தியா – ரூபாய்) வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | இதில் பல்வேறு நாடுகளின் நாணய மதிப்பில் (அமெரிக்கா – டாலர், ஜப்பான் – யென், இங்கிலாந்து – பவுண்ட்) வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |

**(அல்லது)**

(ஆ) (i) **நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் :**

1. நுகர்வோர் கூட்டுறவை நுகர்வோர்கள் ஆரம்பிக்கின்றனர்.
2. இந்த சங்கங்கள் மற்ற சில்லறை வணிகர்களைப் போல இலாபம் ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு இயங்காமல், மக்களுக்குத் தரமானப் பொருட்களை, சிறந்த விலையில் வழங்குவதை பிரதான நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் சங்கங்களாகும்.

(ii) **உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :**

1. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகிறது.
2. உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அவரவர் இருப்பிடத்தில் உற்பத்தி செய்து முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம்.

(iii) **கூட்டுறவுச் சந்தையிடு சங்கங்கள் :**

1. கூட்டுறவுச் சந்தையிடு சங்கம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மொத்தமாகத் திரட்டி அவைகளைச் சந்தையிடும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம்.
2. இச்சங்கங்கள் முடிவுற்ற பொருட்களைத் தரம் பிரிப்பது, பண்டகத்தில் வைத்துக் காப்பது, விளம்பரம் செய்வது, கட்டுவது, ஏற்றுவது, அனுப்பி வைப்பது போன்ற சந்தையிடல் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் சங்கமாகும்.

(iv) **கூட்டுறவு கடன் சங்கங்கள் :**

1. உறுப்பினர்கட்கு குறுகியகால கடன் வழங்குதல் தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும்.
2. வேளாண்மையினர், கைவினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றோர்க்கு கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் நல்கி வருகின்றன.
3. சுரண்டலை ஒழிப்பது, சிக்கனத்தை வளர்ப்பது என்பதே கடன் சங்கங்களின் தாரக மந்திரம்.

(v) **வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் :**

1. உறுப்பினர்கட்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் எனப்படுகின்றன.
2. சொந்தமாக வீடு கட்ட விழையும் அன்பர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடுகட்ட கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுகின்றனர்.

**45.**(அ) (i) நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.

(ii) தொழில் அமைப்புகளின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.

(iii) பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களைச் சீரமைத்தல்.

(iv) முதலீட்டாளர்களின்மத்தியில்நம்பிக்கையைஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க செய்தல்.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



(v) நிறுமங்களுக்கான மூலதனச் செலவினைக் குறைக்கின்றன. பங்கு விலையின் மீது நேர்முறை தாக்கத்தைக் கொண்டுள்ளது.

**(அல்லது)**

(ஆ) சரக்கு மற்றும் சேவை வரியானது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி, மாநில சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி என மூன்று வகைப்படும்.

(i) **மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) :** சரக்கு மற்றும் சேவை வரியானது சட்டம் 2017ன் கீழ் ஒரு மாநிலத்திற்குள்ளே அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்.

(ii) **மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) :** தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017ன் கீழ் மாநில அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்.

(iii) **யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி (UGST) :** UGST சட்டம் 2017-ன் கீழ் இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்.

(iv) **ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST) :** IGST சட்டம் 2017ன் கீழ் மத்திய அரசால் சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்கு இடையே வருவாய் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**46.** (அ)

(அ) **நிலப் போக்குவரத்து :** நில வாகனப் போக்குவரத்து மூலம் மக்கள் மற்றும் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை நிலப் போக்குவரத்து என்றழைக்கிறோம்.

(i) **பொதி விலங்குகள் :** மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின் தங்கிய பகுதிகளிலும் சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும். குதிரை, கோவேறு கழுதை, கழுதை, ஒட்டகம் மற்றும் யானை போன்ற விலங்குகளை பொதி விலங்குகள் என்றழைக்கின்றோம்.

(ii) **மாட்டு வண்டிகள் :** இந்தியாவில் பொருட்கள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளே ஆகும்.

(iii) **சாலைப் போக்குவரத்து :** சாலைப் போக்குவரத்து என்பது குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு ஏற்றதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது.

(iv) **இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்:** நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும் சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருட்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.

(v) **டிராம் வண்டிகள் :** டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும் பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது. அதன் சுமைதிறன் மிகப்பெரிய அளவு கொண்டது.

(vi) **தொடர் வண்டிப் போக்குவரத்து :** ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது. நீண்ட தூரத்திற்கு மேல் கனரக சரக்குகளைச் சுமந்து செல்வதற்குத் தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவான வழிவகைகளாக இருக்கின்றன.

**(அல்லது)**

(ஆ) (i) **அளவான முதல் :**

1. தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு.
2. அவரின் கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும் மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.

(ii) **வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன் :**

1. வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தனி ஒரு மனிதரால் கட்டுப்படுத்தப்படுகிறது.
2. அவரின் அறிவும் திறமையும் குறிப்பிட்ட அளவிற்கு மேல் வியாபார நடவடிக்கையில் செலுத்த வேண்டி இருப்பதால் அதிகப்படியான மன அழுத்தம் ஏற்படுவதுடன் தவறான முடிவெடுக்க ஏதுவாகிறது.
3. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறமையே அவரின் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வதைத் தடை செய்கிறது.

(iii) **வரையறாப் பொறுப்பு :**

1. வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
2. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

(iv) **சிறப்புத் தேர்ச்சியின்மை :**

1. தனியாள் வணிக அமைப்பு சிறிய அளவில் இருப்பதால் அதன் நிதி ஆதாரம் வரையறுக்கப்பட்டது.
2. பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களையும் பணியமர்த்தப் போதிய பொருளாதார வளம் இல்லாத காரணத்தினால் அதிக நன்மைகளைப் பெற இயலாது.
3. அவரே உற்பத்தி, சந்தையிடுதல், கணக்குப்பதிவியல், கடிதத் தொடர்பு போன்ற பணிகளை ஒருவரே கையாள முடியாது.

www.Padasalai.Net

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com PH:8124201000 / 8124301000

https://t.me/Padasalai.Net https://bit.ly/3pspUm0
www.Padasalai.Net www.CBSEtips.in



**(v) அவசர முடிவு :**

1. அவசர முடிவுகள் நிறுவனத்திற்கு நன்மை பயப்பதாக இருந்தாலும் சில நேரங்களில் வியாபாரத்தை அழிவுப் பாதைக்குச் செல்ல வழி வகுத்துவிடும்.
2. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற பழமொழிக்கு இணங்க இச்செயலும் இருக்கும்.

47.(அ) பின்வருபவை சில்லறை வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஆகும்.

(i) சில்லறை வியாபாரிகள் பல்வேறு பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டிருப்பார்.

(ii) சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடம் மொத்தமாகப் பொருட்களை வாங்கி, அவற்றைச் சிறு அளவில் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.

(iii) முக்கியச் சந்தைப் பகுதிக்கு உள்ளேயோ அல்லது அருகிலேயோ சில்லறை விற்பனை நிலையங்கள் இடம் பெறும்.

(iv) பொதுவாக மொத்த வியாபாரியிடம் கடன் அடிப்படையில் சரக்குகளை வாங்கி, நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு விற்கின்றனர்.

(v) சில்லறை வியாபாரிகள் நுகர்வோரிடம் நேரடித் தொடர்பிலும், உற்பத்தியாளரிடமிருந்து விலகியும் இருப்பார்.

**(அல்லது)**

(ஆ) காப்பீட்டில் பலவகைகள் உள்ளன. அவைகளாவன,

1. ஆயுள் காப்பீடு அல்லது ஆயுள் காப்பீடுறுதி.
2. ஆயுள் சாராக் காப்பீடு அல்லது பொதுக்காப்பீடு பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன,
   (i) தீக் காப்பீடு
   (ii) கடல்சார் காப்பீடு
3. உடல்நலக் காப்பீடு மற்றும்
4. இதரக் காப்பீடுகள்.

**(i) ஆயுள் காப்பீடு :** ஆயுள் காப்பீடு என்பது காப்பீடு நிறுவனம் எனும் காப்பீடு தருநர், காப்பீடு பெறுநர் செலுத்தும் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு அல்லது ஆண்டு முனைமம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையை முனைமமாகப் பெற்றுக் கொண்டு அவரது ஆயுளை காப்பீடு செய்யும் ஒரு ஒப்பந்தம் ஆகும்.

**ஆயுள் காப்பீட்டு திட்டாவண வகைகள் :**

1. முழு ஆயுள் திட்டாவணம்.
2. குறித்த வயதுத் திட்டாவணம்.
3. கூட்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணம்.
4. ஆண்டுத் தொகை திட்டாவணம்.
5. குழந்தைகளுக்கான குறித்த வயது திட்டாவணம்.

**(ii) ஆயுள் சாராக் காப்பீடுகள் :** மனித ஆயுள் சாராத சொத்துக்கள் சார்ந்த காப்பீடு இதுவாகும்.

1. தீக்காப்பீடு
2. கடல்சார் காப்பீடு

**கடல்சார் காப்பீட்டுத் திட்டாவண வகைகள் :**

1. கப்பல்சார் காப்பீடு
2. பொருள்சார் காப்பீடு
3. கப்பல் சத்தக் காப்பீடு

**(iii) உடல்நல காப்பீடு :** 1980களின் காலகட்டம் வரை இந்தியாவில் பெரும்பாலான மருத்துவமனைகள் அரசின் வசமே இருந்ததால் இலவசமாக சிகிச்சை வழங்கப்பட்டது. தனியார் மருத்துவமனைகளின் வருகையும், மருத்துவக் காப்பீட்டின் தேவையும் அதிகரித்ததால் காப்பீட்டு நிறுவனங்கள் பல்வேறு மருத்துவக்காப்பீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தின.

மருத்துவக் காப்பீடு என்பது காப்பீட்டு நிறுவனங்களுக்கும் தனிநபர்கள் அல்லது மனிதக் குழுக்களுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தம் ஆகும்.

**மருத்துவக் காப்பீட்டின் வகைகள் :**

1. தனி நபர் மருத்துவக் காப்பீடு
2. குடும்ப நல திட்டாவணம்
3. முதலீடு இணைந்த காப்பீட்டுத் திட்டங்கள்.

**(iv) இதரக் காப்பீடுகள் :**

1. மோட்டார் வாகனக் காப்பீடு
2. கொள்ளை சார் காப்பீடு
3. கால்நடைக் காப்பீடு
4. பயிர் காப்பீடு
5. விளையாட்டுக் காப்பீடு
6. அமர்த்தியா சென் கல்வி திட்டம்
7. ராஜேஸ்வரி மகிளா கல்யாண பீமா யோஜனா.

☆☆☆

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000
www.Padasalai.Net